தோற்றம் : 1971 அறிந்தேற்பு : 341/1980

# தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர் கழகம்

(Recognized by the Govt. of Tamilnadu G.O.No. 341, Dt. 22-03-1980)

## TAMILNADU GOVERNMENT COLLEGE TEACHERS' ASSOCIATION

TNGCTA

நரசிங்கம் நிலையம், 2, சைடோஜி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை–600 005. Ph : 28516573, Telefax : 28414354

**முனைவர் இரா.வெங்கடாசலம்**
தலைவர்

**முனைவர் சி.திருச்செல்வம்**
பொதுச்செயலர்

**முனைவர் தி. அறிவுடைநம்பி**
**முனைவர் உஷா ரகோத்தம்**
துணைத் தலைவர்கள்

**பேரா.இரா.நிர்மல்குமார் இராச பிரகாஷ்**
**முனைவர் ச.காமாட்சி**
இணைச்செயலர்கள்

சுற்றறிக்கை எண் 9/2015 நாள் : 5.2.2016

இனிய தோழர்களே! தோழியரே!!

வணக்கம். நமது இயக்கத்தின் மாநில சிறப்பு செயற்குழுக் கூட்டம் 9.1.2016 அன்று சென்னை மாநிலக் கல்லூரியில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி ஜேஏசி தொடர் மறியல் போராட்டமானது ஜனவரி 20, 21 ஆகிய தேதிகளில் சென்னை, திருச்சி, கோவை, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து மையங்களில் சிறப்பாக நடைபெற்றது. இப்போராட்டத்தில் நமது இயக்கத்தின் சார்பாக அனைத்து மையங்களிலும் அதிக எண்ணிக்கையில் மகளிர் கலந்து கொண்டு பெருமை சேர்த்தமைக்கு மாநில ஆட்சிக்குழு தனது பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறது. இம் மறியல் போராட்டத்தின் விளைவாக தர ஊதியம் 6000லிருந்து 7000ஐ அந்தந்த தவணை தேதியிலிருந்து நிர்ணயம் செய்து 1.4.2015 முதல் வழங்கிடவும் மற்றும் 1998 TRB ஆசிரியர்களின் ஒட்டுமொத்த பணிமூப்பு பட்டியல், 2011 TRB ஆசிரியர்களின் பணிவரன்முறை ஆணை முதலிய கோப்புகளை விரைந்து முடிக்க உயர் கல்வித்துறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாக அறிகின்றோம்.

**ஜேஏசி பொதுக்குழு**

கடந்த 30.1.2016 அன்று சென்னை AUT அலுவலகத்தில் ஜேஏசி பொதுக்குழுக்கூட்டமானது நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஜனவரி 20, 21 ஆகிய தேதிகளில் நடைபெற்ற தொடர்மறியலில் ஜேஏசி உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டதற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும், இரண்டு நாள் தொடர் மறியல் போராட்டத்திற்குப் பிறகும் தமிழக அரசின் உயர்கல்வித் துறையானது ஜேஏசி பொறுப்பாளர்களை அழைத்துப் பேசாத நிலையில் நிலுவையிலுள்ள கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக கீழ்கண்ட போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதென தீர்மானித்தது.

**தீர்மானங்கள்**

1. 9.2.2016 அன்று அய்பெக்டோவின் 11 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை, வேலூர், சேலம், கோவை, திருச்சி, தஞ்சாவூர், காரைக்குடி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய பல்கலைக்கழகங்களுக்கு முன்பாக பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடத்துவது.

2. அய்பெக்டோ மற்றும் ஜேஏசி கோரிக்கைகளை வலியுறுத்தி 22.2.2016 அன்று சென்னையில் தலைமைசெயலகத்தை நோக்கி பேரணி நடத்துவது.

3. 14.3.2016 அன்று புதுதில்லியில் அய்பெக்டோவின் 11 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜந்தர் மந்தரிலிருந்து பாராளுமன்றம் நோக்கி அய்பெக்டோ நடத்தும் பேரணியில் பெருந்திரளாக கலந்து கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**உயர்மட்டகுழுக் கூட்டம்**

கடந்த 3.2.2016 அன்று திருச்சியில் நமது இயக்கத்தின் அவசர உயர்மட்டகுழுக் கூட்டமானது மாநிலத்தலைவர் பேரா. இரா. வெங்கடாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அண்ணாமலை பல்கலைக்கழக உபரி உதவிப்பேராசிரியர்களை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 3 ஆண்டு கால ஒப்பந்த அடிப்படையில் தமிழக அரசானது பணியமர்த்தியுள்ளதைப் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. அனைத்து உயர்மட்டக்குழு உறுப்பினர்களும் இதில் இருக்கக்கூடிய எதிர்காலப் பிரச்சினைகளின் ஆழத்தை உணர்ந்தும், அரசு கல்லூரிகளில் கல்விச்சூழல் பாதிக்கக்கூடிய அபாயம் குறித்தும் விரிவாக விவாதித்தனர். இக்கூட்டத்தின் இறுதியில் கீழ்க்கண்ட முடிவுகள் ஒருமனதாக எடுக்கப்பட்டன:

1. தமிழக அரசானது அண்ணாமலை பல்கலைக்கழக உபரி ஆசிரியர்களை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 3 ஆண்டு கால ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட ஆணையை உடனடியாக திரும்பப் பெறவேண்டும் என வலியுறுத்தி அனைத்து கிளைகளிலும் பிப்ரவரி 4 மற்றும் 5 ஆகிய தேதிகளில் வாயில் முழக்கப்போராட்டம் நடத்துவது.

2. வருகின்ற 13.2.2016 அன்று அண்ணாமலை பல்கலைக்கழக உபரி ஆசிரியர்களின் பணி நியமன அரசாணையை திரும்பப் பெறக்கோரி சென்னையில் பெருந்திரள் பட்டினிப் போராட்டம் நடத்துவது.

3. அண்ணாமலை பல்கலைக்கழக உபரி ஆசிரியர்களின் பணி நியமனத்தை திரும்ப பெறக்கோரி 13.2.2016 அன்று சென்னையில் பட்டினிப்போராட்டம், 22.2.2016 அன்று சென்னையில் நடைபெறவுள்ள ஜேஏசி-யின் பேரணி மற்றும் 14.3.2016 அன்று புதுதில்லியில் அய்பெக்டோவின் பேரணி ஆகியவற்றை கருத்தில் கொண்டு, 6.3.2016 அன்று நடைபெறவிருந்த நமது மாநில இயக்கத் தேர்தலை அதே மாதத்திற்குள் நடத்துவதற்கு ஏதுவாக முடிவு செய்ய 14.2.2016 அன்று நமது இயக்க கட்டிடமான பேரா. நரசிங்கம் நிலையத்தில் மாநில செயற்குழுவை நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**பிற செய்திகள்**

- 9.1.2016 அன்று சென்னையில் நடைபெற்ற செயற்குழு முடிவின் அடிப்படையில் கடலூர், சிதம்பரம், விருத்தாசலம் கிளைத் தேர்தல்கள் மற்றும் கோவை, கடலூர் மண்டலத் தேர்தல்கள் ஆட்சிக் குழுவின் வழிகாட்டுதலின்படி சிறப்பாக நடந்து முடிந்துள்ளது.

- 2011 TRB ஆசிரியர்களின் பணிவரன்முறை பட்டியலை திருத்தம் செய்து இதுவரை அனுப்பாத கிளைகள் உடனடியாக கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கிளைச் செயலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

- 2016 பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் இயக்கம் திட்டமிட்டுள்ள அனைத்து போராட்டங்களிலும் உறுப்பினர்களை பெருமளவில் கலந்து கொள்ள தயார் செய்யவும்.

**<u>மாநில செயற்குழு கூட்டம்</u>**

**நாள் : 14.02.2016 நேரம் : காலை 10.30 மணி**

**இடம் : பேரா. நரசிங்கம் நிலையம், சென்னை**

**திட்டமிட்ட போராட்டம்! ஒன்றே நமது துயரோட்டும்!!**

தோழமையுடன்

பொதுச் செயலாருக்காக